குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
எஸ்.டி.சி.எண்.2555/2024

அ.சா. 3

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 04–ம் தேதி திங்கள்கிழைமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்திரா | தொழில் | |
| கணவர் பெயர் | பாலாஜி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.38 மணி,

Accused Selvakumar present. Advocate Mr.Jagadeesan present for accused. APP Mr. M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் சக்கரை செட்டிப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். கடந்த 16.11.2021 ஆம் தேதி நானும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சக்கரை செட்டிப்பட்டியில் இருந்து, காமலாபுரம் செல்லும் சாலையில் நடைபயிற்சி சென்றோம்.

2. அங்கிருந்து எங்கள் ஊரை நோக்கி திரும்ப வந்து கொண்டிருந்தபோது, கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே வந்தபோது, காமலாபுரம் பக்கமிருந்து எங்கள் ஊரை நோக்கி 63 சி என்ற அரசு பேருந்து வந்து, எங்கள் மீது மோதிவிட்டது. அப்போது, காலை 05.30 மணி இருங்கும். பேருந்து எங்கள் மீது மோதிவிட்டு, நிற்காமல் சென்றுவிட்டது.

3. நான் கவிழ்ந்து கிழே விழுந்துவிட்டேன். சௌமியாவிற்கு இடுப்பு, முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அவரது கணவருக்கு தகவல் சொன்னோம். பிரபா என்பவருக்கு தலை, நெற்றி, முதுகு ஆகிய இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த வீரமணி என்பவர் உதவியோடு, அவருக்கு தண்ணீர் கொடுத்தோம்.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:54:07 +0530

4. அதன்பின்பு, அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். எனக்கு கீழே விழுந்தததில் காயம்  எதுவும் ஏற்படவில்லை. விபத்து ஏற்படுத்தி பேருந்தின் பதிவெண் டி.என்.30 1202 ஆகும். அந்த பேருந்தை ஓட்டி வந்த நபரை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

5. நாங்கள் சக்கரை செட்டிப்பட்டியில் இருந்து பொட்டியபுரம் வரை நடைபயிற்சி செல்வோம். எங்கள் ஊரில் இருந்து செல்லும்போது, நான், பிரபா, சௌமியா ஆகியோர் எங்கள் ஊரில் இருந்து புறப்பட்டு, பொட்டியபுரம் வரை நடந்து சென்று திரும்பி வரும்போது, பொட்டியபுரத்தில் நடைபயிற்சி செல்வோரும் வருவார்கள்.

6. நாங்கள் சக்கரை செட்டிப்பட்டியில் இருந்து பொட்டியபுரம் வரை நடந்து சென்று வருவதற்கு 1 மணி நேரம் ஆகும். சக்கரை செட்டிப்பட்டியில் இருந்து சேசியன் காடு, மூங்கில் குத்து, கட்டிக்காரனூர் ஆகிய வழியாக நடைபயிற்சி செல்வோம். நாங்கள் மூவரும் சக்கரை செட்டிப்பட்டியை சேர்ந்தவர்கள். நாங்கள் கட்டிக்காரனூரிலிருந்து, சக்கரை செட்டிப்பட்டி செல்வதற்கு சுமார் 1/2 மணி நேரம் ஆகும்.

7. சம்பவ இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருந்தது என்றால் சரி. சம்பவ இடம் போக்குவரத்து மற்றும் கடைகள் மிகுந்த பகுதி என்றால் சரி. சம்பவம் நடந்தபோது, சம்பவ இடத்தில் இருந்த கடைகள் திறந்திருந்தது என்றால் சரியல்ல.  சம்பவம் நடந்தவுடன் எனது உறவினருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று சொல்லவில்லை என்றால், சரியல்ல. வீரமணி என்பவரும், ஒரு அக்காவும் தகவல் கொடுத்ததாக கூறியுள்ளேன்.

8. சம்பவத்தின்போது எனக்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரி. நான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்லவில்லை. எதிரி வாகனத்தை வாகன விதிமுறைகளின் படி ஓட்டி வந்தார் என்றாலும், ஹாரன் அடித்து, சிக்னல் கொடுத்த பின்பு தான் சம்பவ இடத்திற்கு பேருந்து வந்தது என்றாலும் சரியல்ல. நாங்கள் மூவரும் பேசிக்கொண்டே அஜாக்கிரதையாக நடந்து வந்ததால், எங்களது கவனக்குறைவால் தான், விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 1.50  மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:54:11 +0530